# அழகப்பா பல்கலைக்கழகம்
# ALAGAPPA UNIVERSITY




[ A State University Accredited with "A+" grade by NAAC (CGPA:3.64) in the Third Cycle and Graded as Category – I University by MHRD – UGC ]

Karaikudi – 630 003, Tamil Nadu.

## ஆய்வியல் நிறைஞர் – தமிழ்
## விருப்பம்சார் தெரிவு முறையில்
## உலகத்தர அடிப்படையிலான பாடத்திட்டம்

(2022–2023–ஆம் கல்வியாண்டு முதல் சேரும் மாணாக்கர்களுக்குரியது)

# M.Phil – TAMIL

**[Broad Based Board of Studies with Choice Based Credit System (CBCS)]**

(For the candidates admitted from the academic year 2022–2023 onwards)

## தமிழ்த்துறை
## DEPARTMENT OF TAMIL

# விருப்பம்சார் தெரிவு முறையில் (CBCS)
# உலகத்தர அடிப்படையிலான
# ஆய்வியல் நிறைஞர் (எம்.பில்) பட்டப் பாடத்திட்டம்

(2022-2023 - ஆம் கல்வியாண்டு முதல் சேரும் மாணாக்கர்களுக்குரியது )


பாடத்திட்டக்குழுத் தலைவர்

**முனைவர் சு.இராசாராம்**

பேராசிரியர் & தலைவர்

தமிழ்த்துறை



# அழகப்பா பல்கலைக்கழகம்

**(தேசியத் தர நிர்ணயக்குழுவின் மூன்றாம் சுற்றுத் தர மதிப்பீட்டில் “A+” (CGPA: 3.64) தகுதி பெற்றமாநிலப் பல்கலைக்கழகம் மற்றும் மத்திய மனிதவள மேம்பாட்டு அமைச்சகம் – பல்கலைக்கழக மானியக்குழுவின் முதல்தரப் பல்கலைக்கழகத் தகுதி பெற்றது)**

**காரைக்குடி – 630 003**

**தமிழ்நாடு**

## பாடத்திட்டக்குழு உறுப்பினர்கள்

| வ.எண் | பெயர் மற்றும் முகவரி | நிலை | |
|---|---|---|---|
| 1 | **முனைவர் சு.இராசாராம்**<br>பேராசிரியர் மற்றும் தலைவர்<br>தமிழ்த்துறை<br>அழகப்பா பல்கலைக்கழகம்<br>காரைக்குடி – 3 | தலைவர்<br>(Chair Person) |  |
| 2 | **முனைவர் இராமன் விமலன்**<br>கற்பித்தல் தகைமையாளர்<br>ஆசியன் மொழிகள் மற்றும்<br>பண்பாட்டுக் கல்விக்குழுமம்<br>தேசியக் கல்விக் கழகம்<br>நன்யாங் தொழில்நுட்பப்<br>பல்கலைக்கழகம்<br>சிங்கப்பூர் | துறைசார்<br>அயலக<br>வல்லுநர்<br>(Foreign Subject<br>Expert) |  |
| 3 | **முனைவர் இரா. காமராசு**<br>பேராசிரியர் மற்றும் தலைவர்<br>நாட்டுப்புறவியல் துறை<br>தமிழ்ப் பல்கலைக்கழகம்<br>தஞ்சாவூர் – 10 | துறைசார்<br>வல்லுநர்<br>(Subject Expert) |  |
| 4 | **முனைவர் சு. பாலசுப்பிரமணியன்**<br>பேராசிரியர் மற்றும் தலைவர்<br>தமிழ் மற்றும் பண்பாட்டியல் புலம்<br>தமிழ்நாடு திறந்தநிலைப்<br>பல்கலைக்கழகம்<br>சென்னை | துறைசார்<br>வல்லுநர்<br>(Subject Expert) |  |
| 5 | **திரு கே. நடராசன்**<br>நிலைய இயக்குநர் (பணி நிறைவு)<br>அகில இந்திய வானொலி நிலையம்<br>திருச்சிராப்பள்ளி | தொழிலக<br>வல்லுநர்<br>(Industry<br>Expert) |  |
| 6 | **திரு மு. நடேசன்**<br>இணைப்பேராசிரியர்<br>தமிழ்த்துறை<br>அழகப்பா பல்கலைக்கழகம்<br>காரைக்குடி – 3 | அகநிலை<br>உறுப்பினர்<br>(Internal<br>Member) |  |

| | | | |
|---|---|---|---|
| 7 | **முனைவர் மு. சுதா**<br>இணைப்பேராசிரியர்<br>தமிழ்த்துறை<br>அழகப்பா பல்கலைக்கழகம்<br>காரைக்குடி – 3 | அகநிலை<br>உறுப்பினர்<br>(Internal<br>Member) |  |
| 8 | **முனைவர் சொ. சுரேசு**<br>உதவிப்பேராசிரியர்<br>தமிழ்த்துறை<br>அழகப்பா பல்கலைக்கழகம்<br>காரைக்குடி – 3 | அகநிலை<br>உறுப்பினர்<br>(Internal<br>Member) |  |
| 9 | **முனைவர் சா. இரமேசு**<br>உதவிப்பேராசிரியர்<br>தமிழ்த்துறை<br>அரசினர் கலைக்கல்லூரி (தன்னாட்சி)<br>கும்பகோணம் | முன்னாள்<br>மாணவர்<br>(Alumni) |  |
| 10 | **டாக்டர் வி. சிவக்குமார்**<br>இயக்குநர்<br>பாடத்திட்ட வடிவமைப்பு மற்றும்<br>மேம்பாட்டுக்குக் குழுமம்<br>அழகப்பா பல்கலைக்கழகம்<br>காரைக்குடி – 3 | அதிகாரபூர்வ<br>உறுப்பினர்<br>(Ex – Officio<br>Member) |  |

# அழகப்பா பல்கலைக்கழகம்

# தமிழ்த்துறை

### காரைக்குடி – 630003, தமிழ்நாடு

## விதிமுறைகள் மற்றும் பாடத்திட்டம்

## விருப்பம்சார் தெரிவு முறை – பல்கலைக்கழகத் துறை

(2022-2023 - ஆம் கல்வியாண்டு முதல் சேரும் மாணாக்கர்களுக்குரியது)

**துறையின் பெயர் :** தமிழ்த்துறை

**பட்டப்படிப்பு:** ஆய்வியல் நிறைஞர் (எம்.பில்) - தமிழ்

**பட்டப் படிப்பின் கால அளவு:** முழு நேரம் (ஓராண்டு)

**பயிற்றுமொழி:** தமிழ்

**சேர்க்கைக்கான தகுதி:** முதுகலை (எம்.ஏ) – தமிழ்

ஆய்வியல் நிறைஞர் (எம்.பில்) பட்டப் பாடத்திட்ட அமைப்பு (Course Structure)

| வ. எண் | தாள் குறியீடு | தாளின் பெயர் | கற்றல் அளவெண் | மதிப்பெண்கள் | | |
|---|---|---|---|---|---|---|
| | | | | அக மதிப் பெண் | புற மதிப் பெண் | மொத் தம் |
| முதற்பருவம் | | | | | | |
| 1 | 421101 | **முதன்மைப் பாடம் – I** ஆராய்ச்சி நெறிமுறைகள் | 4 | 25 | 75 | 100 |
| 2 | 421102 | **முதன்மைப் பாடம் – II** ஆராய்ச்சி அணுகுமுறைகள் | 4 | 25 | 75 | 100 |
| 3 | 421103 | **முதன்மைப் பாடம் – III** திறனறிதாள் | 4 | 75 | 25 | 100 |
| இரண்டாம் பருவம் | | | | | | |
| 4 | 421201 | **முதன்மைப் பாடம் – IV** தமிழ் ஆராய்ச்சியின் வளர்ச்சி | 4 | 25 | 75 | 100 |
| 5 | 421999 | **முதன்மைப் பாடம் - V** ஆய்வேடு & வாய்மொழித் தேர்வு | 8 | 50 | 150 (100+50) | 200 |
| | | **மொத்தம்** | **24** | **-** | **-** | **600** |

- அக மதிப்பீட்டில் 15 மதிப்பெண்களுக்கு எழுத்துத் தேர்வும் 10 மதிப்பெண்களுக்கு திட்டக்கட்டுரையுமாக அமைதல் வேண்டும்.

- புற மதிப்பீட்டில் 75 மதிப்பெண்களுக்கு எழுத்துத் தேர்வு அமைதல் வேண்டும்.
- அக மதிப்பீட்டிலும் புற மதிப்பீட்டிலும் எழுத்துத் தேர்வுக்குரிய வினாக்கள் இது அல்லது அது (Either or Type) என்னும் அமைப்பில் அலகுதோறும் ஒவ்வொரு வினா இடம்பெறுதல் வேண்டும்.
- ஆய்வேடு மதிப்பீட்டில் புறமதிப்பீட்டாளருக்கு 100 மதிப்பெண்ணும் வாய்மொழித்தேர்வுக்கு 50 மதிப்பெண்ணுமாக அமைதல் வேண்டும்.

<table>
<tr><td colspan="5">ஆய்வியல் நிறைஞர் – முதற் பருவம்</td></tr>
<tr><td colspan="5">முதன்மைப் பாடம் – I</td></tr>
<tr><td colspan="2">தாள் குறியீடு:<br>421101</td><td>ஆராய்ச்சி நெறிமுறைகள்<br>(Research Methodology)</td><td>கற்றல்<br>அளவெண்: 4</td><td>நேரம்:<br>5 மணி</td></tr>
<tr><td>நோக்கம்</td><td colspan="4">➢ ஆராய்ச்சி நெறிமுறைகளை மாணவர்களுக்குக் கற்பித்தல்.<br>➢ ஆய்வேடு உருவாக்கத்திற்கான நெறிமுறைகளை எடுத்துரைத்தல்.<br>➢ ஆய்வு வகைகளை விளக்குதல்.<br>➢ ஆய்வு முறைகளை உணர்த்துதல்.<br>➢ ஆய்வேட்டின் கட்டமைப்பை உணர்த்துதல்.</td></tr>
<tr><td>அலகு: 1</td><td colspan="4">ஆராய்ச்சி – சொற்பொருள் விளக்கம் – ஆய்வுக்களங்கள் – ஆய்வுச்சிக்கலைக் கண்டுபிடித்தல் – ஆய்வு முன்னோடிகள் – ஆய்வுத் தலைப்பைத் தேர்ந்தெடுத்தல் – ஆய்வாளனுக்குரிய தகுதிகள் – ஆய்வு நெறித்திட்டமும் (Research Design) அதன் பல்வேறு கூறுகளும் – சான்றுகள் – முதன்மைச் சான்றுகள் – துணைமைச் சான்றுகள் – ஆய்வுக்கு நூலகப் பயன்பாட்டின் துணை – கருவி நூற்பட்டியல் தயாரித்தல் – ஆய்வடங்கல் தொகுத்தலும் பயனும் – ஆய்வடங்கள் வகைகள் – குறிப்பட்டையைப் பயன்படுத்தி ஆய்வு எழுதுதலும் அதன் சிறப்பும்.</td></tr>
<tr><td>அலகு: 2</td><td colspan="4">ஆய்வின் வகைகள் – அடிப்படை ஆய்வு (Fundamental Research), பயன்பாட்டாய்வு (Applied Research) , செயற்பாட்டாய்வு (Action Research) ஆகியன பற்றிய விளக்கங்கள் – கள ஆய்வும் அதன் இன்றியமையாமையும் – கள ஆய்வில் தரவுகளைச் சேகரிக்கும் வழிமுறைகள் – வினா நிரலின் தன்மையும் வகைகளும் – வினா நிரல் அமைப்பு – நேர்காணல் விளக்கம் – நேர்காணல் வகைகள் - நேர்காணலின் போதும் நேர்காணலுக்குப் பின்னும் மேற்கொள்ள வேண்டிய நெறிமுறைகள்.</td></tr>
<tr><td>அலகு: 3</td><td colspan="4">உற்றுநோக்கலின் தன்மையும் வகைகளும் – பங்குபெறும் உற்றுநோக்கல் , பங்குபெறா உற்றுநோக்கல், கட்டுப்பாடுடைய (Controlled) உற்றுநோக்கல், கட்டுபாடற்ற (Non – Controlled) உற்றுநோக்கல் ஆகிய உற்றுநோக்கல்களில் ஏற்படும் சிக்கல்கள் – உற்றுநோக்கலின் பயன் – கருதுகோளும் உற்றுநோக்கலும் – கருதுகோள் விளக்கமும் வரையறையும் – கருதுகோளின் இன்றியமையாமை – கருதுகோள் வகைகள் – கருதுகோளை உருவாக்கும் வாயில்கள்.</td></tr>
<tr><td>அலகு: 4</td><td colspan="4">ஆய்வு முறைகள் – அறிவியல் முறை (Scientific Method) – ஒப்பியல் முறை (Comperative Method) – வரலாற்றியல் முறை (Historical Method) –</td></tr>
</table>

| | |
|---|---|
| | பகுப்பியல் (Analytical Method) முறை – அமைப்பியல் (Structural Method) முறை – தனிநிலை ஆய்வு (Case Study) – மேற்கோள் காட்டுதல் – மேற்கோளைத் தேர்ந்தெடுத்தல் – மேற்கோளின் இன்றியமையாமை – மேற்கோளின் அமைப்பும் அளவும் – சான்றெண் விளக்கம் (அடிக்குறிப்பிடுதல்) காட்டும் வகைகள் – இன்றியமையாமை. |
| **அலகு: 5** | ஆய்வேடு உருவாக்கம் – மூன்று படிகள் எழுதுதலும் அதன் தேவையும் – ஆய்வேட்டிற்குரிய நடை – ஆய்வேட்டு நடையில் தவிர்க்கத்தக்க கூறுகள் – கணினியாக்கமும் பிழைகள் தவிர்த்தலும் – பிழை இன்மைக்கும் திருத்தத்திற்கும் மேற்கொள்ளவேண்டிய நெறிமுறைகள் – ஆய்வேட்டின் கட்டமைப்பு – அக அமைப்பு – புற அமைப்பு – துணைநூற்பட்டியல் அமைப்பு முறை – பின்னிணைப்பு – வரைபடங்கள் - புள்ளி விவரங்கள். |
| **பார்வை நூல்கள்** | கணேசன். எஸ்.என்., 1991, ஆய்வியல் கோட்பாடுகளும் செயல்முறைகளும், பயோனிர் புக் சர்வீஸ், சென்னை – 5.<br>கோதண்டராமன். பொன்., 1998, ஆராய்ச்சி நெறிமுறைகள், ஐந்திணைப் பதிப்பகம், சென்னை – 5.<br>சண்முகம். ஆ ., சித்திரபுத்திரன். எச் . (ப.ஆ), 2005, ஆய்வு முறையியல், அன்னம், தஞ்சாவூர்.<br>சுப்பிரமணியன். ச.வே., 1975, ஆராய்ச்சி நெறிமுறைகள், உலகத்தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை.<br>தமிழண்ணல் & லெட்சுமணன். எம் .எஸ்., 1988,ஆய்வியல் அறிமுகம், மீனாட்சி புத்தக நிலையம், மதுரை – 1 ஐந்தாம் பதிப்பு.<br>நாராயணன். க .,1987,ஆய்வு எது?ஏன்?எப்படி?, தமிழ்ப்புத்தகாலயம், சென்னை- 5.<br>பாலசுப்பிரமணியன். கு.வெ., 2001, ஆய்வியல் நெறிகள், உமா நூல் வெளியீட்டகம், தஞ்சாவூர்.<br>மணிகண்டன். வெ .,1989, ஆராய்ச்சிக் கட்டுரை எழுதுவது எப்படி?, தேவி பதிப்பகம், குமரி மாவட்டம்.<br>முத்துச்சண்முகன் & வேங்கடராமன். சு., 1980, இலக்கிய ஆராய்ச்சி நெறிமுறைகள், முத்து பதிப்பகம், மதுரை -19 .<br>லூர்து. தே., 2000, நாட்டார் வழக்காற்றியல் கோட்பாடுகள், நாட்டார் வழக்காற்றியல் ஆய்வு மையம், பாளையங்கோட்டை, திருநெல்வேலி.<br>விசுவநாதன். ஈ.சா., 1986, ஆய்வு நெறிமுறைகள், தமிழ்ப்புத்தகாலயம், சென்னை. |

| | |
|---|---|
| **பயன்** | ➢ ஆராய்ச்சி மாணவர்கள் ஆய்வு நெறிமுறைகளை அறிந்து கொள்ளுதல்.<br>➢ நெறிமுறைகளைப் பின்பற்றி, செம்மையான ஆய்வேட்டை எழுதும் திறன் பெறுதல்.<br>➢ ஆய்வு வகைகளை அறிதல்.<br>➢ ஆய்வு முறைகளை உணர்தல்.<br>➢ ஆய்வேட்டின் கட்டமைப்பைக் கற்றல். |
| | பாடத்திட்ட வடிவமைப்பு: முனைவர் மு. சுதா |

<table>
<tr><td colspan="4">ஆய்வியல்நிறைஞர் – முதற் பருவம்</td></tr>
<tr><td colspan="4">முதன்மைப் பாடம் – II</td></tr>
<tr><td>தாள் குறியீடு: 421102</td><td>ஆராய்ச்சி அணுகுமுறைகள் (Research Approaches)</td><td>கற்றல் அளவெண்: 4</td><td>நேரம்: 5 மணி</td></tr>
<tr><td>நோக்கம்</td><td colspan="3">➢ ஆராய்ச்சி அணுகுமுறை குறித்து விளக்கி, அதன் வகைகளை எடுத்துரைத்தல்.<br>➢ தமிழியல் ஆய்வுக்கு ஆராய்ச்சி அணுகுமுறைகளின் இன்றியமையாமையைக் கற்பித்தல்.<br>➢ தமிழ் இலக்கண, இலக்கியங்களுக்கேற்ப ஆராய்ச்சி அணுகுமுறைகள் வேறுபடுதலை உணர்த்துதல்.<br>➢ ஆராய்ச்சி அணுகுமுறைகளின் வகைகளை விளக்குதல்.<br>➢ ஆராய்ச்சி அணுகுமுறைகளைத் தமிழ் இலக்கியங்களில் பொருத்திக் காட்டுதல்.</td></tr>
<tr><td>அலகு: 1</td><td colspan="3">அணுகுமுறை விளக்கமும் வரையறையும் – ஆராய்ச்சியில் அணுகுமுறையின் பங்கும் அதன் இன்றியமையாமையும் – ஆய்வுப் பொருளுக்கும் வகைமைக்கும் தக்கவாறு அணுகுமுறை வேறுபடுதல் – அணுகுமுறையின்றி மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளைவிட அணுகுமுறைகளைப் பின்பற்றிய ஆய்வுகள் சிறந்திருத்தல் – அணுகுமுறையை வகைப்படுத்துதல் – அணுகுமுறைகளால் ஆய்வுபொருள் தெளிவு பெறுதலும் விரிவடைதலும் – அணுகுமுறை அனைத்திற்கும் அடிப்படையான விளக்கவியல் முறை (Descriptive Method) – விளக்கவியலின் இயல்பும் இன்றியமையாமையும் – பிற அணுகுமுறைகளுக்கு விளக்கவியல் முறை அடிப்படையாதல்.</td></tr>
<tr><td>அலகு: 2</td><td colspan="3">அறவியல் அணுகுமுறை பற்றிய விளக்கம் – தமிழிலக்கியமும் அறமுணர்த்தலும் – திருக்குறளும் அறவியலணுகுமுறையும் – பாரதிதாசன் கவிதைகளில் அறவியல் அணுகுமுறை – உளவியல் அணுகுமுறை விளக்கம் – பிராய்டு, யுங் ஆகியோரின் அடிப்படை உளவியல் – உளவியலைப் பயன்படுத்தி இலக்கியத்தை ஆராய்தல் – சங்க இலக்கியம், பக்தி இலக்கியம் குறித்த உளவியல் பார்வை.</td></tr>
<tr><td>அலகு: 3</td><td colspan="3">சமூகவியல் அணுகுமுறையின் இலக்கணம் – இலக்கியமும் சமூகமும் – காலந்தோறும் சமூகம் இலக்கியத்தில் இடம்பெறுதல் – அமைப்பியல் அணுகுமுறை விளக்கம் – வகைகள் – தமிழிலக்கியத்தில் அமைப்பியல் அணுகுமுறை.</td></tr>
<tr><td>அலகு: 4</td><td colspan="3">தொல்படிவ அணுகுமுறை (Archetypal Approach) – அதன் இயல்புகள் –</td></tr>
</table>

| | |
|---|---|
| | தமிழிலக்கியமும் தொல்படிவ அணுகுமுறையும் – அழகியல் அணுகுமுறை (Aesthetic Approach) – அதன் இயல்புகள் – தமிழிலக்கியத்தில் அழகியல் அணுகுமுறை – ஒப்பியல் அணுகுமுறை – ஒப்பியல் அணுகுமுறையின் இன்றியமையாமை – தமிழில் ஒப்பியலின் தோற்றமும் வளர்ச்சியும். |
| **அலகு: 5** | மானிடவியல் அணுகுமுறை – சமுதாய பண்பாட்டு மானிடவியல்கள் – அவற்றின் விளக்கம் – மானிடவியல் நோக்கில் சங்க இலக்கியத்தை ஆராய்தல் – வரலாற்றியல் அணுகுமுறை - அதன் இயல்புகள் – கால அடிப்படையில் நூல், கருத்து, செய்திகளை அணுகுதல் – வாழ்க்கை வரலாற்றியல் அணுகுமுறை – அதன் இயல்புகள் – வாழ்க்கை வரலாற்றியல் அணுகுமுறையும் தமிழிலக்கியமும் – வகைமை நிலையியல் அணுகுமுறை - அதன் இயல்புகள் – தமிழில் வகைமை நிலையியல் பெறுமிடம். |
| **பார்வை நூல்கள்** | அருணன், மார்க்சிய அழகியல், சிட்டு பதிப்பகம், மதுரை- 2.<br>இரவிச்சந்திரன். தி.கு., 2007, ஃபிராய்ட் யூங் லக்கான் அறிமுகமும் நெறிமுகமும், அடையாளம்.<br>சசிவல்லி. வி.சி.,1995, அழகியல் சிந்தனைகள், உலகத்தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை-113.<br>சாவித்திரி. இரா., 2012, இலக்கியத்திறனாய்வியல் – ஓர் அறிமுகம், பகுதி – I & II, சக்தி பதிப்பகம், தஞ்சாவூர்.<br>ஞானமூர்த்தி. தா. ஏ., இலக்கியத்திறனாய்வியல், யாழ் வெளியீடு, சென்னை – 40.<br>தமிழண்ணல், 2012, ஒப்பிலக்கிய அறிமுகம், மீனாட்சி புத்தக நிலையம், மதுரை – 1, பதினான்காம் பதிப்பு.<br>திருமலை. ம., 2010, ஒப்பிலக்கியம் கொள்கைகளும் பயில்முறைகளும், செல்லப்பா பதிப்பகம், மதுரை -1.<br>நடராசன். தி .சு., 2022, திறனாய்வுக்கலை கொள்கைகளும் அணுகுமுறைகளும், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிமிடெட், சென்னை – 98, திருந்திய பதினைந்தாம் பதிப்பு.<br>பகவதி. கு ., 1998, திறனாய்வு அணுகுமுறைகள், உலகத்தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை.<br>பக்தவத்சல பாரதி, 2009, பண்பாட்டு மானிடவியல், மெய்யப்பன் பதிப்பகம், சிதம்பரம், நான்காம் பதிப்பு.<br>பஞ்சாங்கம். க .,1996, தமிழ் இலக்கியத் திறனாய்வு வரலாறு, அகரம், கும்பகோணம்.<br>பாலச்சந்திரன். சு .,1992, இலக்கியத் திறனாய்வு, நியூசெஞ்சுரி புக் ஹவுஸ் |

| | |
|---|---|
| | பிரைவேட் லிமிடெட், சென்னை – 98, திருந்திய நான்காம் பதிப்பு.<br>பூரணச்சந்திரன். க., 2009, அமைப்பியமும் பின்அமைப்பியமும், அடையாளம், புத்தாநத்தம், விரிவாக்கப்பட்ட இரண்டாம் பதிப்பு.<br>முத்துமோகன். ந. 1998, அமைப்பியல் பின்அமைப்பியல், காவ்யா.<br>ராசா. கி., 2018, ஒப்பிலக்கியம், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிமிடெட், சென்னை, இரண்டாம் பதிப்பு. |
| **பயன்** | ➢ ஆராய்ச்சி மாணவர்கள் ஆராய்ச்சி அணுகுமுறைகளைத் தெளிவாக அறிந்து கொள்ளுதல்.<br>➢ தமிழியல் ஆய்வுகளில் ஆராய்ச்சி அணுகுமுறைகளைப் பின்பற்றி ஆய்வு மேற்கொள்ளும் திறன் பெறுதல்.<br>➢ தமிழ் இலக்கண, இலக்கியங்களுக்கேற்ப ஆராய்ச்சி அணுகுமுறைகள் வேறுபடுதலை உணர்தல்.<br>➢ ஆராய்ச்சி அணுகுமுறைகளின் வகைகளை கற்றல்.<br>➢ ஆராய்ச்சி அணுகுமுறைகளைத் தமிழ் இலக்கியங்களில் பொருத்தி அறிதல். |
| | பாடத்திட்ட வடிவமைப்பு: முனைவர் சொ. சுரேசு |

| ஆய்வியல்நிறைஞர் – முதற் பருவம் | | | |
|---|---|---|---|
| முதன்மைப் பாடம் – III | | | |
| **தாள் குறியீடு: 421103** | **திறனறிதாள் (General Skills)** | **கற்றல் அளவெண்:4** | **நேரம்: 5 மணி** |

| | |
|---|---|
| **நோக்கம்** | ➢ ஆராய்ச்சி மாணவர்களுக்கான பொதுத்திறன்களை மேம்படுத்தல்.<br>➢ தமிழியலோடு தொடர்புடைய திறன்களை அறியச்செய்தல்.<br>➢ நவீன தொழில்நுட்பத் திறன்களை அறிமுகப்படுத்துதல்.<br>➢ போட்டித் தேர்வுத் திறன்களை வளர்த்தல்.<br>➢ மேடைக்கலைத் திறன்களை எடுத்துரைத்தல். |
| **அலகு: 1** | **கணினி கற்றல் திறன்:** இந்திய இணையவழிக் கற்றல் மையங்கள் – மின்னணுவழிக்கற்றல் – அலைபேசிவழிக் கற்றலும் செயலிகளும் – மின்னணுக் கற்றலுக்கான கருவிகள் – நழுவக் காட்சிகள் (Power Point Presentation) தயார் செய்தல் - இணையத்தில் ஒளிவழி எழுத்துப் படிப்பான் (Optical Character Recognizer), குரல் அறிவான் (Voice Recognizer), கணினி அடிப்படையிலான மொழி ஆய்வு (Computer Based Language) – கணினிவழி இலக்கிய ஆய்வு – தமிழ் சொல்லாளர் (Tamil Software), அகராதிகள், சொல்லடைவு அகர வரிசைப்படுத்துதல் – கருத்தரங்கு, பயிற்சிப்பட்டறை போன்றவற்றை இணையவழி நடத்துதல் – தொடுதிரைப் பயன்பாட்டை அறிதல் (Usage of Smart Board). |
| **அலகு: 2** | **படைப்பாற்றல் திறன்:** கட்டுரை இலக்கணம் – கட்டுரை வகைகள் – அறிவியல் கட்டுரை, வருணனைக் கட்டுரை, கருத்து விளக்கக் கட்டுரை, அழகியல் கட்டுரை, ஆய்வுக்கட்டுரை படைத்தல் – ஆய்வுப்பொருண்மை ஒன்றைத் தேர்வு செய்து கட்டுரை எழுதி ஒப்படைத்தல். |
| **அலகு: 3** | **செய்தி, காட்சி ஊடகங்களில் பங்கேற்றல் திறன்:** நிகழ்வுகளை உற்று நோக்கி செய்தி சேகரிப்பு - இதழ்களுக்கு எழுதுதல் – தலையங்கம் எழுதுதல் - நிகழ்வுகளைக் கொண்டு செய்தி உருவாக்குதல் – செய்திச் செம்மையாக்கம் - இதழ்களுக்கான பொருண்மைக் கட்டுரை படைத்தல், விமர்சனக் கட்டுரை எழுதுதல் – வானொலி, தொலைக்காட்சிக்கு நிகழ்ச்சி படைத்தல் - வானொலி உரை தயாரித்தல் – கவியரங்கம், விவாத அரங்கம், நேர்காணல் ஆகியவற்றுக்கான திட்ட வரைவு தயாரித்தல் – ஆய்வுத்திட்ட மாதிரிகளை உருவாக்கல் – ஒப்படைப்புச் செய்தல். |
| **அலகு: 4** | **போட்டித் தேர்வுத் திறன்:** போட்டித் தேர்வுகளுக்குத் தயாராதல் – போட்டித் தேர்வுகளில் தமிழ்சார்ந்த செயல்பாடுகளின் இன்றியமையாமையை உணர்தல் – தமிழ் கற்றோருக்கான போட்டித் தேர்வு வாய்ப்புகளை அறிதல் |

| | |
|---|---|
| | - போட்டித் தேர்வுப் பாடத்திட்டங்களைத் தேடித் தொகுத்தல்- அவற்றிற்கான தரவுகளைச் சேகரித்தல் - பல்கலைக்கழக மானியக்குழுவின் தகுதித்தேர்வு – ஆய்வுத்தகைமைக்கான (Fellowship) தேர்வுகளின் தரவுகளைச் சேகரித்தல் - ஒப்படைப்புச் செய்தல். |
| **அலகு: 5** | **மேடைப் பங்களிப்புத் திறன்:** பேச்சாற்றலின் இன்றியமையாமையை அறிதல் – திரு. வி. க. – ரா. பி. சேதுப்பிள்ளை – தவத்திரு குன்றக்குடி அடிகளார் – கிருபானந்த வாரியார் – புலவர் கீரன் – பேரறிஞர் அண்ணா – பேராசிரியர் பா. நமச்சிவாயம் – முனைவர் சொ. சத்யசீலன் – முனைவர் சாலமன் பாப்பையா – முனைவர் கு. ஞானசம்பந்தன் – சொல்வேந்தர் சுகிசிவம் – இலங்கை ஜெயராஜ் – வழக்கறிஞர் த. இராமலிங்கம் – பேராசிரியர் சிவகாசி இராமச்சந்திரன் – முனைவர் இளம்பிறை மணிமாறன் – முனைவர் சரசுவதி இராமநாதன் – திருமதி பாரதி பாஸ்கர் ஆகியோரின் பேச்சுகளைக் கேட்டு நுட்பங்களை அறிதல் – பட்டிமண்டபம் - விவாத அரங்கம் – தனிப்பேச்சு – வரவேற்புரை – நன்றியுரை – நிகழ்ச்சித் தொகுப்பு போன்றவற்றிற்குப் பயிற்சியளித்தல் – நிகழ்த்திக்காட்டடல். |
| **பார்வை நூல்கள்** | ஆண்டோ பீட்டர். மா., 2002, தமிழும் கணிப்பொறியும், கற்பகம் புத்தகாலயம், முதற்பதிப்பு.<br>இராதா செல்லப்பன், 2005, கணினி கலைச்சொற்கள், நியூசெஞ்சுரி புக் ஹவுஸ், இரண்டாம் பதிப்பு.<br>குருசாமி. மா .பா., 2001, இதழியல் கலை, குரு - தேமொழி பதிப்பகம், திண்டுக்கல், புத்தாக்கம் பெற்ற ஏழாம் பதிப்பு.<br>ஞானசம்பந்தம். கு., 2012, பேசும் கலை, விஜயா பதிப்பகம், கோயம்புத்தூர், மூன்றாம் பதிப்பு.<br>துரையரசன். க., 2009, இணையமும் இனிய தமிழும், இசை பதிப்பகம், கும்பகோணம்.<br>பரந்தாமனார்.அ.கி.,1995, பேச்சாளராக, அல்லி நிலையம், சென்னை–7. |
| **பயன்** | ➢ ஆராய்ச்சி மாணவர்களின் பொதுத் திறன்கள் மேம்படுதல்.<br>➢ வேலைவாய்ப்புக்குரிய திறன்களை ஆராய்ச்சி மாணவர்கள் பெறுதல்.<br>➢ நவீன தொழில்நுட்பத் திறன்களை அறிந்து கொள்ளுதல்.<br>➢ போட்டித் தேர்வுத் திறன்களை அறிதல்.<br>➢ மேடைக்கலைத் திறன்களை உணர்தல். |
| | பாடத்திட்ட வடிவமைப்பு: முனைவர் சு.இராசாராம் |

| | | | |
|---|---|---|---|
| **ஆய்வியல்நிறைஞர் – இரண்டாம் பருவம்** | | | |
| **முதன்மைப் பாடம் – IV** | | | |
| **தாள் குறியீடு: 421201** | **தமிழ் ஆராய்ச்சியின் வளர்ச்சி** | **கற்றல் அளவெண்:4** | **நேரம்: 5 மணி** |
| **நோக்கம்** | ➢ தமிழ் ஆராய்ச்சியின் வளர்ச்சியை வரலாற்று அடிப்படையில் அறியச் செய்தல்.<br>➢ தமிழ் ஆராய்ச்சியின் வளர்ச்சியை வகைமை அடிப்படையில் கற்பித்தல்.<br>➢ இக்காலத் தமிழியல் ஆய்வுகள் குறித்து விளக்குதல்.<br>➢ தமிழ் ஆராய்ச்சியில் செய்தனவும் செய்ய வேண்டியனவும் குறித்து உணர்த்துதல்.<br>➢ தமிழ் ஆராய்ச்சி மேம்படுவதற்கான வழிமுறைகளை எடுத்துரைத்தல். | | |
| **அலகு: 1** | **இலக்கண ஆய்வுகள்:** எழுத்திலக்கண, சொல்லிலக்கண ஆய்வுகள் – பொருளிலக்கண ஆய்வுகள் – யாப்பிலக்கண ஆய்வுகள் – அணியிலக்கண ஆய்வுகள் – நிகண்டுகள் குறித்த ஆய்வுகள் – இலக்கண உரைகள் குறித்த ஆய்வுகள். | | |
| **அலகு: 2** | **பழந்தமிழ் இலக்கிய ஆய்வுகள்:** எட்டுத்தொகை ஆய்வுகள் – பத்துப்பாட்டு ஆய்வுகள் – திணை, துறை ஆய்வுகள் - அக இலக்கிய ஆய்வுகள் – புற இலக்கிய ஆய்வுகள் - அகப்புற இலக்கிய ஆய்வுகள்- சங்க இலக்கிய உரை ஆய்வுகள் – பதினெண்கீழ்க்கணக்கு அற இலக்கிய ஆய்வுகள் – அக இலக்கிய ஆய்வுகள் - புற இலக்கிய ஆய்வுகள். | | |
| **அலகு: 3** | **பின் பழந்தமிழ் இலக்கிய ஆய்வுகள்:** இரட்டைக்காப்பிய ஆய்வுகள் – ஐம்பெருங்காப்பிய ஆய்வுகள் - ஐஞ்சிறு காப்பிய ஆய்வுகள் – பிற காப்பிய ஆய்வுகள் – பன்னிரு திருமுறை ஆய்வுகள் – நாலாயிரத் திவ்விய பிரபந்த ஆய்வுகள் - சிற்றிலக்கிய ஆய்வுகள் – தாயுமானவர், இராமலிங்க அடிகள், அருணகிரிநாதர், வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகள் ஆகியோரின் படைப்புகள் குறித்த ஆய்வுகள் – சித்தர் இலக்கிய ஆய்வுகள் – தனிப்பாடல் குறித்த ஆய்வுகள். | | |
| **அலகு: 4** | **இக்காலத் தமிழியல் ஆய்வுகள்:** மரபுக் கவிஞர்களின் படைப்புகள் குறித்த ஆய்வுகள் - புதுக்கவிதை குறித்த ஆய்வுகள் – சிறுகதை, புதினம், நாடகம், கட்டுரை, கடித இலக்கியங்கள் குறித்த ஆய்வுகள் – திருக்கோயிலாய்வுகள் – நாட்டார் வழக்காற்றியல் ஆய்வுகள் – மொழியியல் ஆய்வுகள். | | |
| **அலகு: 5** | **கல்விப்புலம் சாராத / சார்ந்த ஆய்வுகள்:** எஸ். வையாபுரிப் பிள்ளை, தெ.பொ.மீனாட்சிசுந்தரனார், மு. வரதராசனார், வ. சுப. மாணிக்கனார், அ.ச. ஞானசம்பந்தன், க.கைலாசபதி, நா. வானமாமலை, கா. சிவத்தம்பி | | |

| | |
|---|---|
| | ஆகியோரின் தமிழாராய்ச்சி வளர்ச்சிப் பணிகள் – கல்வியாளர் ஆய்வுகள் - அயல் மாநிலப் பல்கலைக்கழகங்களில் தமிழாராய்ச்சி – கேரளப் பல்கலைக்கழகம், திருவேங்கடவன் பல்கலைக்கழகம், திராவிடப் பல்கலைக்கழகம், பாண்டிச்சேரி நடுவண் பல்கலைக்கழகம் – தமிழாராய்ச்சியின் இன்றைய நிலை – தமிழாராய்ச்சியை மேம்படுத்துவதற்குரிய வழிமுறைகள். |
| **பார்வை நூல்கள்** | சஞ்சீவி. ந ., சங்க இலக்கிய ஆய்வும் அட்டவணையும், காவ்யா சண்முகசுந்தரம் (தொ.ஆ), காவ்யா, 2010.<br>சுப்பிரமணிய அய்யர். ஏ .வி., தமிழ் ஆராய்ச்சியின் வளர்ச்சி, அமுத நிலையம், சென்னை -14,1959.<br>தமிழண்ணல், தமிழியல் ஆய்வு, மதுரை காமராசர் பல்கலைக்கழகப் பதிப்புத்துறை வெளியீடு, 1983.<br>தமிழ்ப் பேராசிரியர்கள், தமிழ் ஆராய்ச்சி வரலாறு, முதல் தொகுதி, பச்சையப்பன் ஆய்வரங்கம், சென்னை – 30, 1998.<br>பஞ்சாங்கம். க.,1996, தமிழ் இலக்கியத் திறனாய்வு வரலாறு, அகரம், கும்பகோணம் - 1<br>பரமசிவன். தொ ., அன்னை அஞ்சுகம் தந்தை முத்துவேலர் நினைவு அறக்கட்டளைச் சொற்பொழிவுகள் - தமிழாராய்ச்சியின் வளர்ச்சி, தமிழ்ப்பல்கலைக்கழகம்.<br>பிச்சை. அ ., தமிழியல் ஆய்வு வரலாறு, கபிலன் பதிப்பகம், காந்திகிராமம், 2015.<br>பாலசுப்பிரமணியன். கு .வெ., சங்க இலக்கிய ஆய்வுகளின் மதிப்பீடு, தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர், 2008.<br>பாலசுப்பிரமணியன். கு.வெ., சங்க இலக்கியக் கொள்கை, மீனாட்சி புத்தக நிலையம், மதுரை, 2008.<br>பூரணச்சந்திரன். க ., தமிழ் இலக்கியத் திறனாய்வு வரலாறு, தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர், 2007. |
| **பயன்** | ➢ தமிழ் ஆராய்ச்சியின் வளர்ச்சியை வரலாற்று அடிப்படையில் அறிதல்.<br>➢ தமிழ் ஆராய்ச்சியின் வளர்ச்சியை வகைமை அடிப்படையில் கற்றல்.<br>➢ இக்காலத் தமிழியல் ஆய்வுகள் குறித்து உணர்தல்.<br>➢ தமிழ் ஆராய்ச்சியில் செய்தனவும் செய்ய வேண்டியனவும் குறித்து அறிதல்.<br>➢ தமிழ் ஆராய்ச்சி மேம்படுவதற்கான வழிமுறைகளைக் கற்றல். |
| | பாடத்திட்ட வடிவமைப்பு: முனைவர் சு. இராசாராம் |

<table>
<tr><th colspan="5">ஆய்வியல்நிறைஞர் – இரண்டாம் பருவம்</th></tr>
<tr><th colspan="5">முதன்மைப் பாடம் - VI</th></tr>
<tr><td colspan="2">தாள் குறியீடு: 421999</td><td>ஆய்வேடு & வாய்மொழித் தேர்வு</td><td>கற்றல் அளவெண்: 8</td><td>நேரம்: 16 மணி</td></tr>
<tr><td>நோக்கம்</td><td colspan="4">➢ ஆராய்ச்சி நெறிமுறைகளைப் பின்பற்றி ஆய்வேடு எழுதுதல்.<br>➢ ஆராய்ச்சி அணுகுமுறைகளை ஆய்வுக் களத்திற்கேற்ப பின்பற்றுதல்.<br>➢ ஆய்வேட்டின் அகக் கட்டமைப்பு அடிப்படையில் ஆய்வேட்டை உருவாக்கச் செய்தல்.<br>➢ ஆய்வேட்டின் புறக்கட்டமைப்பு அடிப்படையில் ஆய்வேட்டை உருவாக்கச் செய்தல்.<br>➢ செம்மையான ஆய்வேட்டை உருவாக்கும் திறன் பெறச் செய்தல்.</td></tr>
<tr><td>பயன்</td><td colspan="4">➢ ஆராய்ச்சி நெறிமுறைகளைப் பின்பற்றி ஆய்வேடு எழுதுதல்.<br>➢ ஆராய்ச்சி அணுகுமுறைகளை ஆய்வுக் களத்திற்கேற்ப பின்பற்றுதல்.<br>➢ ஆய்வேட்டின் அகக் கட்டமைப்பு அடிப்படையில் ஆய்வேட்டை உருவாக்குதல்.<br>➢ ஆய்வேட்டின் புறக்கட்டமைப்பு அடிப்படையில் ஆய்வேட்டை உருவாக்குதல்.<br>➢ செம்மையான ஆய்வேட்டை உருவாக்கும் திறன் பெறச் செய்தல்.</td></tr>
</table>



# வள்ளல் வாழ்த்து

கோடி கொடுத்த கொடைஞன் குடியிருந்த
வீடும் கொடுத்த விழுச்செல்வன் - தேடியும்
அள்ளிக் கொடுத்த அழகன் அறிவூட்டும்
வெள்ளி விளக்கே விளக்கு!

முன்பெருந் தவத்தால் தோன்றி
முயன்று எமைக் காக்கும் வள்ளல்
அன்பினால் அழகப்பாவின்
அறம் பணி போற்றி செய்வாம்!